செய்தி வெளியீடு எண்: 161 நாள் :15–03–2016

**தமிழ்நாட்டில் தேர்தல் நன்னடத்தை விதிகளை மீறியவர்களிடமிருந்து 13.03.2016 வரை ரூ.7.40 கோடி பறிமுதல் – பறக்கும் படை, கண்காணிப்புக் குழு நடவடிக்கை**

***********

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருந்து வருகிறது. தேர்தல் பறக்கும் படையினரால் பல்வேறு மாவட்டங்களில் கண்காணிக்கப்பட்டு 13.03.2016 அன்று ரூ.23,83,077/– ரொக்கம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.1,51,000/– மதிப்புள்ள 151 அரிசி பைகள் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் ரூ.10 லட்சம், தர்மபுரி மாவட்டத்தில் 7 நாடுகளின் வெளிநாட்டு பணநோட்டுகள் (Foreign Currencies), திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.1.53 லட்சம், பெங்களூரிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கொண்டு சென்ற ரூ.3.90 லட்சம் கேரளாவிலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு கொண்டு சென்ற ரூ.1.45 லட்சம், திருப்பூர் மாவட்டத்தில் ரூ.5.93 லட்சம், திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.96 ஆயிரம் என போதுமான ஆதாரங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் கைப்பற்றப்பட்டன. கடலூர், மதுரை ஆகிய மாவட்டப் பகுதிகளில் பல்வேறு நிறுவனங்களின் சார்பில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள், 3,74,030 மி.லிட்டர், புதுச்சேரி மாநிலத்திலிருந்து எடுத்து சென்ற 110 லிட்டர் சாராயம் ஆகியவையும் பறிமுதல் செய்யப்பட்டு வழக்கு பதியப்பட்டுள்ளன. 73 வழக்குகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டன.

மேலும் ஆட்டோவில் கட்சி தொடர்பான ஸ்டிக்கர் ஒட்டிச் சென்றது, அனுமதி இல்லாமல் பொது இடத்தில் கட்சி கொடியினை நிறுவியது, அனுமதியின்றி கட்சி கொடிகள் பேனர்களை வைத்து அவற்றை அகற்றாமல் விதிமுறைகளை மீறியது, அனுமதி பெறாமல் சுவர்களில் விளம்பரம் செய்தது, பேருந்து நிலைய சுவற்றில் கட்சி போஸ்டர் ஒட்டியது என்பது போன்ற விதிமீறல் காரணங்களுக்காக சென்னை, மதுரை, கோவை, தேனி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு கட்சியினர் மீது தேர்தல் விதிமீறல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் (Static Surveillance Team) மூலம் நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3 லட்சம், நீலகிரி மாவட்டத்தில் ரூ.1.42 லட்சம், தேனி மாவட்டத்தில் 4.5 கிலோ கஞ்சா மற்றும் ரூ.1.56 லட்சம் ரொக்கம், திருப்பூர் மாவட்டத்தில் ரூ.6 லட்சம், வேலூரில் ரூ.1.24 லட்சம் என மொத்தம் ரூ.13,29,090/– ரொக்கம் 13.03.2016 அன்று பறிமுதல் செய்யப்பட்டன.

தேர்தல் விதிமுறை அமலாக்கப்பட்டதிலிருந்து 13.03.2016 வரை ரூ.2.25 கோடி பறக்கும் படையினராலும், ரூ.5.15 கோடி நிலையான கண்காணிப்புக் குழுவினராலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தேர்தல் நியாயமாக–முறையாக–நேர்மையாக நடக்க பொதுமக்களும், அரசியல் கட்சியினரும் நல்ல ஒத்துழைப்பு வழங்குமாறு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு.ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப.அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

***********